
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1042

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---


திரைக்கதை வசனம்

# கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

40

# அக அழகைக் கொண்டாடிய குடும்பக் காவியம்!



**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

கலைஞர் கதை, திரைக்கதை, வசனம் எழுதிய திரைப்படங்களில் சரித்திரப் படங்கள், சமூக - அரசியல் திரைப்படங்கள் போலவே குடும்பத் திரைப்படங்களும் கணிசமான எண்ணிக்கையில் உள்ளன. அவ்வாறு வெளிவந்த திரைப்படம் ‘தங்கத் தம்பி’.

1967 ஜனவரி 26-ஆம் தேதி வெளியான இந்தப் படம், அண்ணனுக்கும் தம்பிக்கும் இடையிலான பாசத்தை மையமாகக் கொண்டது. மேஜர் சுந்தர்ராஜன், ரவிச்சந்திரன், வாணிஸ்ரீ, பாரதி, நாகேஷ், மனோரமா, ஓ.ஏ.கே.தேவர் என மிகக் குறைவான நடிகர்களைக் கொண்டு எடுக்கப்பட்ட படம். தயாரிப்பு உமையாள் புரொடக்ஷன். இயக்கம் ராம்நாத் பிரான்சிஸ். இசை கே.வி.மகாதேவன்.

## திரைப்படத்தின் கதை

அண்ணன் வழக்கறிஞர் வரதன் (மேஜர் சுந்தரராஜன்). அவரின் மனைவி பணக்கார வீட்டுப் பெண் சௌந்தரி (வாணிஸ்ரீ). அவர்களுடன் வரதனின் தம்பி டாக்டர் வாசு (ரவிச்சந்திரன்) வசிக்கிறார்.

வாசு கிராமப்புறக் குடிசைகளுக்குச் சென்று ஏழை மக்களுக்கு இலவசமாக மருத்துவம் பார்க்கிறான். சாப்பிட வழியில்லாமல் வறுமையில் வாடும் நோயாளிகளுக்குத் தனது கைக்காசையும் கொடுத்து பால், பழங்கள் வாங்கி சாப்பிடச் சொல்லும் ஏழை நேசராக இருக்கிறான். அது அவளின் அண்ணி சௌந்தரிக்குப் பிடிக்கவில்லை. அதே நேரத்தில், அவனுக்கு வரும் மனைவி ஏழையாக இருக்க வேண்டும், தனக்குச் சமமான பணக்காரப் பெண் வாசுவுக்கு வந்துவிடக் கூடாது எனவும் உள்ளூர விரும்புகிறாள். ஏழைப் பெண் வந்தால்தான் தனக்கு அடிமையாகக் கீழ்படிந்து நடப்பாள் என்று எண்ணம் கொண்டிருப்பாள்.

வாசு மருத்துவம் பார்க்கப்போன குடிசைப் பகுதியில், பார்வதியைச் சந்திக்கிறான். அவளின் நோய்வாய்ப்பட்ட தந்தை, சிகிச்சை பலனளிக்காமல் இறந்துபோகிறார். அநாதையாக நிற்கும் பார்வதியை ரவுடியான பவுன் (ஓ.ஏ.கே.தேவர்) அடைய ஆசைப்படுகிறான். அதே நேரத்தில், அவனிடம் இருந்து பார்வதியைக் காப்பாற்றி, ஆதரவாக இருக்கும் வாசு, அவளை விரும்புவதைக் குடும்ப கௌரவம் காரணமாக வெளிப்படுத்தாமல் இருக்கிறான்.

பார்வதி தன்னை ஏற்க மறுப்பதால் கோபம் கொள்ளும் பவுன், அவள் வசிக்கும் குடிசைக்குத் தீ வைத்துவிடுகிறான். குடிசை எரிந்து சாம்பலாகிறது. பார்வதி உயிர் தப்புகிறாள். இதைக் கேள்விப்பட்டு, பார்வதியைத் தேடிப்போகும் வாசுவையும் பவுன் கடுமையாகத் தாக்கி, மாட்டு வண்டியில் போட்டு அனுப்புகிறான். வீடு வராத தன் தம்பியைத் தேடி வரும் வரதன், மாட்டு வண்டியில் குற்றுயிராகக் கிடக்கும் தம்பியைக் கண்டு மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றுகிறான்.

வாசுவை மருத்துவமனையில் வந்து பார்த்துவிட்டு வீடு திரும்பும் சௌந்தரி, தனது காரில் வந்து மயங்கி விழுந்த பெண்ணைத் தனது வீட்டுக்கு வேலை செய்ய அழைத்து வருகிறாள். அவள்தான் பார்வதி என சௌந்தரிக்குத் தெரியாது. வாசு குணமடைந்து வீடு திரும்புகையில், வீட்டில் பார்வதியைப் பார்த்து அதிர்ச்சியடைந்து, அவளிடம் சென்று பேசுகிறான். ஆனால் பார்வதியோ, வாசுவுக்கும் தனக்குமிடையிலான அந்தஸ்து வேறுபாட்டைக் கருதி, நான் பார்வதியல்ல என்று சொல்லி விலகிப்போகிறாள். எனினும், பல முயற்சிகளுக்குப் பின், பார்வதியைச் சமாதானம் செய்து திருமணமும் செய்துகொள்கிறான்.

சௌந்தரி விரும்பியபடியே ஒரு ஏழைப் பெண், வாசுவுக்கு மனைவியாக வந்துவிட்டதால், அவளை சம்பளம் இல்லாத வேலைக்காரியாக வைத்து மிகவும் கொடுமையாக நடத்துகிறாள். இதைக் கவனிக்கும் வாசு, தன் அண்ணி மீது கோபம் கொள்கிறான். இதற்கிடையே, பார்வதி கர்ப்பமடைந்து ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். அதைக் கண்டு பொறாமை அடையும் சௌந்தரி, அது நாள்வரை குழந்தை பெற்றால் தன் அழகு பறிபோய்விடும் எனப் பிள்ளைப்பேற்றைத் தள்ளிப்போட்டு வந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு, அவளும் தாயாகிறாள். ஆனால், தன் அழகு பறிபோய்விடக் கூடாது என்பதற்காகக் குழந்தைக்குப் பால் கொடுக்க மறுக்கிறாள். தன் மகனுக்கும் பார்வதியையே பால் கொடுக்கச் செய்கிறாள். இவ்வாறு இரண்டு குழந்தைகளையும் வளர்ப்பதுடன் வீட்டு வேலைகளையும் பார்வதி ஒருத்தியே செய்கிறாள். சௌந்தரி தன் கணவனுடன் பார்ட்டி, பார்க் என ஊர் சுற்றுகிறாள். அதே நேரத்தில், தன் கணவனிடம் வாசு, பார்வதி இருவரையும் தவறாக சித்திரித்துக்கொண்டே இருப்பாள்.

பார்வதிக்கு, உடல்நலம் சரியில்லாத ஒருநாளில், அவளிடம் ஏன் எனக்கு இன்னும் காபி தரவில்லை என்று சௌந்தரி சண்டை போடுகிறாள். அப்போது அங்கு வரும் வாசு, பார்வதி மட்டும்தான் வேலை செய்ய வேண்டுமா? என்று கோபப்பட்டுப் பேசுகிறான். அதே நேரத்தில் அங்கு வரும் வரதனும் கோபப்பட, சண்டை பெரிதாகிறது.

சௌந்தரி பார்வதியின் கன்னத்தில் அறைய, அதற்கு கோபம் கொள்ளும் வாசு, கைத்துப்பாக்கியை எடுத்து வந்து அண்ணியை மிரட்டுகிறான். அப்போதைய சச்சரவில், அண்ணன் வரதன் தோள்பட்டையில் குண்டு பாய்ந்துவிடுகிறது. வாசு கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறான். பார்வதியும்



குழந்தையும் சௌந்தரியால் வீட்டை விட்டு துரத்தப்படுகின்றனர். அதைத் தடுக்கும் கணவனுடன் வாக்குவாதம் முற்றி, சௌந்தரி மயக்கமடைவாள். மருத்துவர் வந்து பரிசோதித்துவிட்டு சௌந்தரிக்குப் புற்றுநோய் என்று கூறுகின்றனர்.

## ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து...

சிறையில் இருக்கும் வாசு, தன் அண்ணனைச் சுட்டுவிட்டோமே என்று மனம் வருந்தி, சிறையில் இருந்து தப்பி வீட்டுக்கு வந்து, தன் அண்ணனிடம் மன்னிப்பு கேட்கிறான். வரதன், வீட்டின் உள்ளே அழைத்துச்சென்று சாப்பாடு கொடுக்கிறார். அதற்குள் காவல் துறையினர் வந்து வாசுவைக் கைதுசெய்து அழைத்துச் செல்கின்றனர். அப்போது, காவல் துறை அதிகாரி போன் செய்து தங்களுக்குத் தகவல் சொன்ன சௌந்தரிக்கு நன்றி சொல்கிறார். இதன்மூலம் தன் மனைவியின் தீய குணத்தை வரதன் அறிந்துகொள்கிறார். அதனால், நீதிமன்றத்தில் தன் தம்பிக்காக வாதாடி விடுதலை பெற்றுத் தருகிறார். இறுதியில், சௌந்தரியும் மனந்திருந்தி, புற அழகைவிட அக அழகே உண்மையானது என்று உணர்ந்துகொள்வார். இதுவே படத்தின் கதை.

ஏற்றத்தாழ்வான இந்தச் சமுதாயத்தில் ஏழைகள் படும் துன்பத்தை இத்திரைப்படத்தில் எடுத்துக்காட்டிய கலைஞர், ஏழைகளுக்கு உதவும் சில நல்ல மனங்களால் அவர்களின் விடுதலைக்கு வழி செய்ய முடியவில்லை என்பதை வாசுவுக்கும் பார்வதிக்கும் இடையிலான உறவுமூலம் விளக்குகிறார். அதாவது, ஏழைகளுக்குத் தேவை உடனடியான உதவிகள் மட்டுமல்ல. அவர்களின் வாழ்வில் ஒரு மாறுதல். ஆனால், இந்த மாற்றத்தையும் தடுப்பதற்கும் சீரழிப்பதற்கும் சிலர் இந்தச் சமுதாயத்தில் இருப்பர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பணத்திமிரும், பரம்பரைக் கர்வமும் கொண்ட சௌந்தரி வருகிறாள்.



பார்வதி கதாபாத்திரம் அன்புள்ளம் கொண்டதாகப் படைக்கப்பட்டுள்ளது. இதற்கு நேர் விரோதமாக சௌந்தரி கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. இருவரும் ஒரு கட்டத்தில் சமாதானமடைகின்றனர். இதன்மூலம், நாம் வாழும் நம் சமூகத்தில் மட்டுமல்ல, நம் குடும்பங்களிலும் எவ்வித ஏற்றத்தாழ்வுகளையும் களைந்து, ஒன்றுபட்டு இன்பமாகக் கூடி வாழ வேண்டும் என்பதை கலைஞர் தனது தங்கத் தம்பி திரைப்படத்தின் திரைக்கதை வசனத்தின்மூலம் வலியுறுத்துகிறார்.

> “தன் அண்ணனைச் சுட்டுவிட்டோமே என்று மனம் வருந்தி, சிறையில் இருந்து தப்பி வீட்டுக்கு வந்து, தன் அண்ணனிடம் மன்னிப்பு கேட்கிறான். வரதன், வீட்டின் உள்ளே அழைத்துச்சென்று சாப்பாடு கொடுக்கிறார்.”

...காட்சி விரியும்

---

## சரியான நடவடிக்கைகளும் உறுதியான பதிலும்...

கடந்த சில நாள்களாக மதுரை திருப்பரங்குன்றம் மலையை மையமாக வைத்து மதவாத அமைப்பினர், சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கி வருவது குறித்து எழுத்தாளர் இரா.முருகவேல் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவிலிருந்து...

‘திருப்பரங்குன்றம் விஷயத்தில் தி.மு.க. அரசின் நடவடிக்கை மிகவும் சரியாக இருந்தது.

தி.மு.க. அரசு விட்டுக்கொடுத்து இருந்தால், சங்கிகள் மேலும் மேலும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக முன்னேறிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் நோக்கம், குறிப்பிட்ட இடத்தில் தீபம் ஏற்றுவது அல்ல. அதைக் காரணமாக வைத்து சமூகத்தை மதரீதியாகப் பிளவுபடுத்துவது. மதவெறி ஊட்டப்பட்ட பெரும்பான்மை சமூகத்தை கார்ப்பரேட் சுரண்டலுக்கு ஆளாக்குவது. எனவே, அவர்கள் ஒருபோதும் தீபத்துடன் நிற்கப்போவதில்லை. அப்படியோர் உறுதியை எந்த நீதிமன்றமும் கொடுக்க இயலாது.

பாபர் மசூதியைத் திறந்துவிட்டது, தொலைக்காட்சியில் இதிகாசங்களை ஒளிபரப்பியது, அயோத்தியில் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கியது, பி.ஜே.பி. ராம் லீலா பூஜைகள் நடத்த அனுமதித்ததுதான் இந்த இடத்துக்கு நாட்டைக் கொண்டுவந்துவிட்டது. பி.ஜே.பி.யின் தாக்குதல்கள் நேரடியாக வந்தாலும், வேறு அமைப்புகள் மூலம் வந்தாலும் திட்டவட்டமான, உறுதியான ‘நோ’ என்பதே சரியான பதிலாக இருக்கும்’ என்கிறது அந்தப் பதிவு.

---

## ஃப்ளாஷ்பேக்



## இளைஞர் அணி நிர்வாகிகளாகப் பெற்ற வாழ்த்து!



சு.சுப்பிரமணியன்

2011-ஆம் ஆண்டு, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம், சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நெல்லை ஒருங்கிணைந்த மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜார்ஜ் கோஷல் அவர்கள் தலைமையில், துணை அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நான், சங்கை ராஜதுரை, அன்பழகன், முகமது ஷெரிப் மற்றும் சேர்மசெல்வன் ஆகியோர் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் அவர்கள், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர், இன்றைய கழகத் தலைவர் தளபதி ஆகியோருடன் மேடையில் வாழ்த்துப் பெற்று, புகைப்படம் எடுத்துக்கொண்டோம். மறக்க முடியாத நிகழ்வு!

**– சு.சுப்பிரமணியன்,**
**மேற்கு மாநகரக் கழகப் பொறுப்பாளர்,**
**திருநெல்வேலி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

---

கருவூலம்

## பேராசிரியர் முன்மொழிந்த தீர்மானம்!

1963 ஜூன் மாதம் 8-ஆம் தேதி தொடங்கி 10-ஆம் தேதி வரை கூடிய கழகப் பொதுக்குழு, செயற்குழு, இந்தித் திணிப்புக்கு எதிராக நேரடிப் போராட்டம் நடத்த முடிவெடுத்தது. அனைத்துத் தீர்மானங்களும் பேராசிரியரால் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானங்களை விளக்கிப் பேசினார் பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131